**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)

அமர்வு வழக்கு எண். 153/2022

நாள்: 30.01.2026. தொடங்கும் நேரம் 03.30 மணி

முடியும் நேரம் 04.25 மணி

அரசு தரப்பு சாட்சி: 23

சாட்சி விசாரணையை காணொளி மூலம் நடத்துவதற்கு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து எதிரிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் உள்ளார்கள். சாட்சி ஈரோடு மாவட்டத்தில் உள்ள மாவட்ட முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக **Assistant Programmer**, **திரு. ஆசைத்தம்பி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், ஈரோடு** என்பவர் உள்ளார். சாட்சி கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் Assistant **திருமதி.மலைக்கொளுந்தி** என்பவர் மூலம் பிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிப்படுத்தப்பட்டபின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு.முத்துப்பாண்டி, காவல் ஆய்வாளர், குற்றப்பிரிவு, ஈரோடு மாவட்டம் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 10-ன் படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 16:30:31 +0530

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முத்துப்பாண்டி |
| Father Name | : | நல்ல பெருமாள் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 52 |

(1, 3 எதிரிகள் ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை, 2ம்எதிரி தரப்பில் BNSS–355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்சமயம் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2021ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம், பஜார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கேணிக்ரை காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பிலும் இருந்தேன். அன்றைய தினம் இராமநாதபுரம் வஉசிநகர் இருளாண்டி மகன் ரவி என்பவர் கொடுத்த புகாரை பெற்று அன்றைய அலுவலலில் இருந்த சார்பு ஆய்வாளர் ராமசந்திரன் அவர்கள் கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண்.150/2021 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 302, 109 இதசவின் படி பதிவு செய்யப்பட்ட வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு 20.45 மணிக்கு சென்று அங்கு சாட்சிகள் முத்துராமலிங்கம் மற்றும் பாண்டி ஆகியோர்களை முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.17 மற்றும் அ.சா.ஆ.18**. பிறகு 21.30 மணி முதல் 22.00 மணிவரை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இரத்தம்பட்டமண் சிறிதளவு, இரத்தம்படாதமண் சிறிதளவு அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.19**. அன்றைய தினமே சாட்சிகள் 1 முதல் 12 வரையிலான நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 06.03.2021ம் தேதி வழக்கில் காயம்பட்டு இறந்த நபரான பனையடியான் என்பவரது பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 16:30:42 +0530

06.03.2021 07.00 மணி முதல் 08.45 மணி வரை இராமநாதபுரம் மருத்துத்துவமனையில் வைத்து மேற்கொண்டேன். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.20.** பிரேத விசாரணை முடித்து தலைமைக்காவலர் 458 இளங்கோவன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்துடன் கடவுச்சீட்டும் கொடுத்து அனுப்பினேன். அதன் பின்னர் மேற்படி வழக்கின் எதிரிகளை இராமநாதபுரம் பழைய பேருந்துநிலையம் அருகில் உள்ள பாலுமீனா லாட்ஜ் முன்பு வைத்து 3ம் எதிரி முத்துமுருகன் என்ற செந்தில் என்பவரை 06.03.2021ம் தேதி 09.15 மணிக்கு கைது செய்து இது சம்மந்தமாக சக்கரைக்கோட்டை விஏஓ ஜெயமதி மற்றும் கிராம உதவியாளர் மோகன்தாஸ் அவர்கள் முன்பாக எதிரி வந்து தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் 06.03.2021ம் தேதி 09.30 மணி முதல் 11.00 மணிவரை பதிவு செய்யப்பட்டது. பின்பு அவர்களிடம் மேற்படி அதேசாட்சிகள் முன்னிலையில் வழக்கில் பயன்படுத்தப்பட்ட இரத்தக்கரைபடிந்த சவுக்குக்கட்டை கைப்பற்றப்பட்டது. மேற்படி எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு மற்ற எதிரிகளை தேடிச் சென்றபோது இராமநாதபுரம் சக்கரக்கோட்டை இரயில்வேகேட் அருகில் வைத்து 06.03.2021ம் தேதி 13.30 மணிக்கு 1ம் எதிரி அழகுமலை என்ற அண்ணாமலையை கைது செய்தும், அதேசாட்சிகள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.45 முதல் 15.00 மணிவரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1ம்எதிரி ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆட்டோ ஒன்று எண்.TN 65 AJ 4942 மற்றும் Redme செல்போன் ஒன்று அதேசாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பிறகு 07.03.2021ம் தேதி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் சங்கர், பன்னீர்செல்வம், பாண்டி, இளங்கோ ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் எதிரிகள் 1 மற்றும் 3 ஆகியோர்கள் அணிந்திருந்த ஆடைகளில் சம்பவ நேரத்தில் காயம்பட்ட நபர்களிடமிருந்து ஏற்பட்டிருந்த இரத்தம்படிந்த உடைகளை படிவம் 91ல் கைப்பற்றி சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இத்துடன் எனது விசாரணையை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 16:30:52 +0530

முடித்து 08.03.2021ம் தேதி கேணிக்கரை காவல் நிலையத்திற்கு புதிதாக வந்த காவல் ஆய்வாளர்வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி பஸ்ஸ்டாண்டை ஒட்டி மிகுந்த மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் நான்கு பகுதிகளிலும் கடைகள், ஆட்டோஸ்டாண்ட், வேன் ஸ்டாண்ட் ஆகியவைகள் இருக்கிறது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை காலம் 3ல் இறந்த நபரின் இறப்பு அரசு மருத்துவமனையில் வைத்து மருத்துவர் பார்த்திருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு அறிக்கையில் தெரியாத நபரால் தெரியாத ஆயுதத்தால் இறந்தநபர் தாக்கப்பட்டிருப்பததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாக்கப்பட்ட நபர் முருகன் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில்தான் தாக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முருகன் கோவில் பக்கத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் உள்ளவர்களையோ, அதைச்சுற்றி உள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் எங்கு வைத்து பெறப்பட்டது என்றால், மருத்துவமனையில். புகார் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரன் என்பவர் மருத்துவமனை சென்று இறந்த நபரின் சகோதரர் ரவி என்பவர் ஏற்கனவே எழுதி வைத்திருந்த புகாரை பெற்று வந்தார். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் செல்லவில்லை, மேற்படி புகாரின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் நகலை என்னிடம் 20.30 மணிக்கு கேணிக்கரை காவல் நிலையம் வந்து கொடுத்தார். நான் முதன்முதலாக மருத்துவமனைக்கு பிரேத விசாரணை செய்யத்தான் சென்றேன். சாட்சிகள் சங்கர், இளங்கோ, கபிலன், பன்னீர்செல்வம் ஆகியோர்களை காவல் நிலையத்தில் வைத்துத்தான் விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சாட்சிகளை நான் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். சம்பவ இடத்தில் மேற்சொன்ன

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 16:30:59 +0530

சாட்சிகளை வரவழைத்துத்தான் விசாரித்தேன் என்றால் சரிதான் எனக் கூறிவிட்டு சாட்சி சரியல்ல எனக்கூறுகிறார். நான் விசாரணைக்கு சென்றபோது மேற்சொன்ன சாட்சிகள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். நான் மேற்படி சாட்சிகளுக்கு போன் மூலமோ அல்லது அழைப்பாணையோ கொடுத்தேனா என்றால் இல்லை. 07.03.2021ம் தேதி சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. வழக்கு நாட்குறிப்பேட்டில் எந்தெந்த சாட்சிகளை, எந்தெந்த தேதிகளில், எப்போது, எங்கு விசாரித்தேன் என எழுதவேண்டும் என்றால் சரிதான். நான் பதிவு செய்த வாக்குமூலங்கள் அனைத்தும் உடனுக்குடனாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும், அவ்வாறு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல, சரியான நேரத்திற்கு அனுப்பப்பட்டது. நான் சொன்ன மாதிரி கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சொன்ன இடத்தில், தேதியில், நேரத்தில் வைத்து விசாரிக்கப்படவில்லை என்றும், அவர்கள் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்து கொள்ளப்பட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சாட்சிகள் யாரும் என்னிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 06.03.2021ம் தேதி காலை 09.15 மணிக்கு 1, 3 எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெற்று ஆயுதங்களை கைப்பற்றி முடிக்க எவ்வளவு நேரமானது என்றால் சுமார் 6 மணிநேரமானது. எதிரிகள் எந்த இடத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார்களோ அந்த இடத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலமும், எந்த இடத்தில் வைத்து பொருட்கள் ஆஜர் செய்தார்களோ அந்த இடத்தில் வைத்து அத்தாட்சி தயார்செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். எதிரிகளை கைது செய்யபோகும்போது கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கு அவர்களையும் அழைத்துக்கொண்டுதான் சென்றேனா என்றால் இல்லை, எதிரிகளை கைது செய்த பிறகே அவர்களுக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்தார்கள். எதிரியை எங்கு வைத்து கைதுசெய்தேன் என்றோ அல்லது எந்த நேரத்தில் வைத்து கைது செய்தேன் என்றோ உயர்அதிகாரிகளுக்கோ, நீதிமன்றத்திற்கோ அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் கைதுகுறிப்பாணை மற்றும் கைதுஅறிக்கையில் சொல்லியுள்ளேன். எதிரிகளை கைது செய்த இடம் பொதுஇடம் என்றும் அந்த இடம் மக்கள் அதிக நடமாட்டம் உள்ள மற்றும் வசிக்கக்கூடிய இடம் மற்றும் ஆட்டோஸ்டாண்ட் என்றால் சரிதான். கைது செய்த பிறகு எத்தனை

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.01.30 16:31:09 +0530

மணிநேரம் கழித்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கு தகவல் சொன்னேன் என்றால் உடனே தகவல் சொன்னேன். நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் கைதுசெய்து வாக்குமூலங்கள் பெறவில்லை என்றும், அதன் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கட்டை சாதாரணமாக கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். இறந்தநபர் மதுவின் ஆதிக்கத்தில் சம்பவ நேரத்தில் இருந்தார் என்பது தெரியவந்ததா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டு அறிக்கையில் மற்றும் சடலக்கூராய்வு அறிக்கை மற்றும் இரசாயன பரிசோதனை அறிக்கையில் இறந்தநபர் மது அருந்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதை தெரிந்து கொண்டே நான் இறந்த நபர் மதுவின் ஆதிக்கத்தில் சம்பவ நேரத்தில் இருந்தாரா, இல்லையா என்பது எனக்கு தெரியாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் முக்கியமான இடம் என்றும், அந்த இடத்தில் இருந்த தடயங்கள் அனைத்தையும் நான் திட்டமிட்டு மறைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில், இடத்தில் பார்வை மகசர், வரைபடம், வாக்குமூலங்கள், பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.நான் என் புலன் விசாரணையை சரிவர செய்யவில்லை என்றால் சரியல்ல.

| | | |
|---|---|---|
| Tr.Aasaithambi,<br>Assistant Programmer,<br>Principal District Court,<br>Erode.<br>Coordinator<br>Remote site | Deponent | Tmt.Malaikolunthi, Assistant,<br>Additional District Court,<br>Ramanathapuram.<br>Coordinator Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 16:31:25 +0530